## இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.1.7.A

எண்கணிதச் செயல்பாடுகள் - முழுக்கள் - பயிற்சி

## எண்கணிதச் செயல்பாடுகள் - முழுக்கள் - பயிற்சி

முகிலன் அவனுடைய நண்பனிடம் உள்ளது போல் ஒரு கணிப்பானை வாங்க விரும்பினான். கடையில் விசாரித்ததற்கு அதன் விலை ₹560 எனச்சொன்னார்கள். தந்தையிடம் கேட்டதற்கு அவனிடம் உள்ள சிறுசேமிப்பிலிருந்து அதை வாங்கிக்கொள்ளுமாறு கூறினார். அவனுடைய சேமிப்பில் ₹480 தான் இருந்தது. எனில், கணிப்பானை வாங்குவதற்கு, அவனுடைய தந்தை அவனுக்குக் கொடுத்து உதவ வேண்டிய தொகை எவ்வளவு?

முகிலன் வாங்க உத்தேசித்த கணிப்பானின் விலை = ₹560

அவனுடைய சிறுசேமிப்பில் இருந்த தொகை = ₹480

பாக்கி தேவைப்படும் தொகை = 560 - 480

= ₹80

பாக்கி தேவைப்படும் தொகையான ₹80 - யை அவன் தந்தை அவனுக்குக் கொடுத்து உதவி செய்தால் அவனால் அந்த கணிப்பனை வாங்க இயலும்.

அறிவழகன், மாதாந்திர மளிகைச்சாமான்கள் வாங்குவதற்கு தனது வங்கிக்கணக்கில் இருந்த தொகை ₹4270-யிலிருந்து ₹2816-யை தனது பற்று அட்டை மூலம் எடுத்துச் செலவிட்டார். எனில், அவருடைய வங்கிக்கணக்கில் பாக்கி உள்ள தொகை எவ்வளவு?

அறிவழகனின் வங்கிக்கணக்கில் இருந்த தொகை = ₹4,270

அவர், மாதாந்திர மளிகைச்சாமான்கள் வாங்குவதற்கு செலவிட்ட தொகை = ₹2,816

வங்கிக்கணக்கில் பாக்கி இருக்கும் தொகை = 4,270 - 2,816

= ₹1,454

அறிவழகனின் வங்கிக்கணக்கில் பாக்கி இருக்கும் தொகை ₹1,454.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 25th May, 2022 :: 09:52 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

**V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.**
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**